1975 ஏப்ரல் 2]

மாற்றி நல்ல கட்டடங்களாக மாற்றி தருகின்ற முறையிலே திருத்தியமைக்கின்ற முறையிலே அவற்றிற்காக முன்னுரிமை வழங்குவதற்கு இலாகா ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கட்டடங்களுக்காக ஒரு குறிப்பிட்ட அளவிலே தான் நாம் நிதியை ஒதுக்குகிறோம், அந்த நிதியை மாவட்ட அளவிலே பிறகு ஒதுக்கித் தருகிறோம், அதற்குக் கட்டடக் குழுவினர் தருகின்ற ஒத்துழைப்பின் அடிப்படையிலேயும் ஊராட்சி ஒன்றியங்கள் மன்றங்கள் ஆகியவை தருகின்ற ஒத்துழைப்பின் அடிப்படையிலேயும் அரசு ஈட்டு மானியம் மற்றவையும் தந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த அந்த மாவட்டங்களிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று மிகவும் கட்டட வசதிகள் இல்லாத இடங்களுக்கு முதலிடம் தர வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

அரசு உயர்நிலைப்பள்ளி, கன்னிகைப்பேர்

* 523 வின—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் வட்டம், கன்னிகைப்பேரில் அமையும் அரசு உயர் நிலைப்பள்ளிக் கட்டடம் கட்டும் திட்டம் விரைவு படுத்தப்பட உள்ளதா ?

(இ) ஆம் எனில், இப்பணி எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) கன்னிகைப்பேரில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

செம்பனார்கோயில் ஒன்றிய மருத்துவமனைகள்

* 524 வின—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் செம்பனார் கோயில் ஒன்றிய பராமரிப்பில் உள்ள திருக்கடையூர், பரசலூர் மருத்துவமனைகளை நடப்பு ஆண்டில் அரசு மேற் கொள்ளும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே செம்பனார்கோவில் ஒன்றியப் பராமரிப்பில் உள்ள திருக்கடையூர், பரசலூர் மருத்துவ மனைகளில் இரண்டில் ஒன்றை நடப்பு ஆண்டிலாவது அரசு மேற்கொள்ளும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, திருக்கடையூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனையை எடுத்துக் கொள்வதற்கான முறையிலே அதற்குத் தேவையான ஏற்பாடுகள் என்ற வகையிலே சில ஏற்பாடுகள் குறித்து இந்த இலாகாவைச் சேர்ந்தவர்கள் பரிசீலனை செய்து வருகிறார்கள். அதிலே இரண்டு ஆண்டுகளுக்கு நிதி தருவதற்கு இசைய வேண்டும், அப்படி இசைந்ததற்குப் பின்னாலே கட்டட வசதி, இடவசதி பற்றியெல்லாம் பரிசீலிக்கப்படும். அவை கிடைக்குமானால் இந்த ஆண்டு இல்லாவிட்டால் அடுத்த ஆண்டிலே எடுத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

Seizure of spurious drugs.

* 525 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) whether it is a fact that over Rs. 15,000 worth of spurious life-saving drugs were seized by the City Police in September 1973 at Madras; and

(*b*) if so, the details thereof and the action taken thereon?

* 526 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state:

(a) whether it is a fact that an inter-State gang engaged in the manufacture and distribution of spurious drugs has been unearthed in recent times by the Madras City Police; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) 1972-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் போலியான அல்லது தரக்குறைவான சில ஆண்டி-பயாடிக் (anti-biotic) மருந்துகளும் ஏனைய மருந்துகளும் சென்னை மாநகரக் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டன; அவற்றின் மதிப்பு ஏறத்தாழ ரூ. 13,000 (ரூபாய் பதின்-மூன்றாயிரம்) ஆகும். இது தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டனர். இவ்வழக்கு தொடர்ந்து புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது. வேறு சில மாநிலங்களிலே அவர்கள் பணி செய்திருக்கக் கூடும் என்று கருதப்படுகிற காரணத்தாலே புலனாய்வு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.